# சாமகானம்

இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Leading Jewellery store in London
with the largest selections
including Diamond Jewellery, Thaali Kodi
& all Studded Jewellery



தாலிக்கொடிக்கு
22
CARAT
PERFECT
சான்றிதழ்
வழங்கப்படும்

எப்பொழுதும் நியாயமான விலை.... எல்லாமே புத்தம் புது டிசைன்கள்...
வாருங்கள்..! வாங்கி செல்லுங்கள்...

# Rathy Jewellers Ltd

**Wembley Branch:** 28 Ealing Road, Wembley, HA0 4TL. Tel: **0208 903 3063**

**Tooting Branch:** 209 Upper Tooting Road, Tooting, SW17 7TG. Tel: **0208 662 2233**

**Opening Time:**

Monday - Saturday: 10.00am - 6.30pm, Sunday: 11.00am - 6.30pm

எங்களிடம் வரும் பழைய நகைகள் 24ct தங்கமாக மாற்றப்பட்ட பின்னர்தான்
மீளத் தயாரிக்கப்படுகிறது. அதனால் எல்லா நகைகளுக்கும் 22 கரட் சரியாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
சிறீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வாழ்கவே

ஆதி அந்தம் இல்லாத ஆண்டவன் தெய்வம்
அன்னையும் பிதாவும் எங்கள் முன்னறி தெய்வம்
எண்ணோடு எழுத்தத்தனை ஈந்தவர் தெய்வம் -இனி
என்றும் அவரையே பணிந்து இனிது வாழுவோம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
சிறீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வாழ்கவே

நல்ல உள்ளம் வளர்ப்போம் உடல் உறுதி வளர்ப்போம்
கலை கல்வி வளர்ப்போம் தூய செல்வம் வளர்ப்போம்
நல்லவரை நாடி நிதம் நல்வழி நிற்போம் - எங்கள்
நாட்டினிற்கே சேவை செய்து நாமும் வாழுவோம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
சிறீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வாழ்கவே

முத்தமிழும் கற்று மேலை வித்தையும் கற்போம் - உயர்
சத்தியமும் ஐக்கியமும் வாழ்வில் வளர்ப்போம்
வித்தை தரும் கோணேஸ்வரா இந்து கல்லூரியின்
உத்தமராம் ஆசிரியர் தமை மதிப்போம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
சிறீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வாழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வாழ்த்துச்செய்தி

பிரித்தானியாவில் இயங்கி வருகின்ற எமது பழைய மாணவர் சங்கம் தனது மூன்றாம் ஆண்டின் பூர்த்தியையிட்டு 'சாமகானம்' எனும் ஒரு இதழினை வெளியிடுகின்றது. எமது சங்கம் உருவாகி இந்த மூன்று வருடங்களுக்குள் பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி யதுடன். பல்வேறுபட்ட செயற்திட்டங்களை புலத்தில் வெற்றிகரமாக செய்திருக்கிறது என்பதில் எது வித சந்தேகமும் இல்லை.

பழைய மாணவர்களுடைய கடின உழைப்பினால் நாம் இன்று ஒரு நல்ல நிலையை அடைந்திருக்கிறோம். எதிர்காலத்தில் திருக்கோணமலை சார்பான ஒரு சிறந்த பெரிய அமைப்பாக இது விளங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது .

தொடர்ந்து எமது சமூகத்தினுடைய பங்களிப்பு எமக்கு கிடைக்க வேண்டும். நாம் பெரிய அளவிலான செயற்திட்டங்களை செயற்படுத்த இந்த பங்களிப்பு எமக்கு உறுதுணையாக இருக்கும். மாவட்டத்தின் பல பாடசாலைகளிலிருந்து பல்வேறு பட்ட தேவைகள் குறித்து எமக்கு கடிதங்கள் வந்திருக்கின்றன. இத் தேவைகள் பற்றி கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கான உதவிகளை செய்ய நாம் தயாராக இருக்கிறோம்.

எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் செய்து கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்

**கு. முகுந்தகுமார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் திருக்கோணமலை மாவட்டத்தில் 1897ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரியானது கோணேஸ்வரப் பெருமான், பத்திரகாளி அம்பாள், கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் சித்தி விநாயகர் ஆகிய தெய்வங்களது அருளையும் சுவாமி விபுலானந்தர் மேலும் பல துறவிகளது ஆசிகளையும் பெற்று வளர்ந்து வரும் கல்லூரியாகும்.

இக்கல்லூரியின் வளர்ச்சியுடன் இணைந்து செயற்படும் அமைப்பு என்ற வகையில் பழைய மாணவ சங்கத்தின் பணியானது 78 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டது. தாய் சங்கத்தின் கிளைகளாக செயற்படும் ஐக்கிய இராச்சியம், கனடா, பிரான்ஸ், கொழும்பு ஆகிய கிளைகள் செயற்பட்டு வருவது சிறப்புக்குரியதாகும். எனினும் இலண்டன் கிளையானது 3 ஆண்டுகளுக்கு மேல் தனது பணியினை கல்லூரிக்காக ஆற்றிவருவது பாராட்டுக்குரிய விடயமாகும். இதற்காக அவர்களை வாழ்த்துகின்றேன்.

ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பழைய மாணவர்கள் தம்மிடையே உறவை பேணுவதற்கும் கல்லூரியை எண்ணிப் பார்ப்பதற்கும் இப்பழைய மாணவர் சங்கம் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றது. அதே வேளை வருடாந்த ஒன்றுகூடல், விளையாட்டு நிகழ்வுகள் போன்ற செயற்பாடுகளை அங்கு நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வருட ஒன்றுகூடல் நிகழ்வின் போது "சாமகானம்" எனும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெருமையடைகின்றேன். அத்துடன் இது ஒரு ஆவணப் பதிவாக அமைகின்றது. இதன் மூலம் கல்லூரி பற்றியும் அங்கு வாழும் பழைய மாணவர் விபரங்களை அறிந்து கொள்வதற்கும். இச்சஞ்சிகை உதவுகின்றது.

இத்தகைய முயற்சிக்காக உழைக்கும் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், அங்கத்தவர்கள் அவர்களது உறவுகளை பாராட்டுவதுடன் இத்தகைய முயற்சி தொடர்ந்து வெளிக் கொண்டுவரப்பட வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்

நன்றி

கல்விப்பணியிலுள்ள
**திரு. செல்வரெட்ணம் பத்மசீலன்**
தி / இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)
திருக்கோணமலை, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் வாழ்த்துச் செய்தி

பெருந்தகை விபுலானந்த அடிகளாரால் வழிநடத்தப்பட்டு தொடர்ந்து வந்த அதிபர்கள் ஆசிரியர்களால் மிகவும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு இன்று கிழக்கிலங்கையின் மிக முக்கியமான தேசிய பாடசாலையாக மிளிரும் திருக்கோணமலை, இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானியா கிளையின் செயலாளர் என்ற முறையில் எங்கள் மூன்றாம் ஆண்டு பூர்த்தியையிட்டு வெளியாகும் இந்த மலரில் எனது செய்தியை பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல பழைய மாணவர்களின் கடும் முயற்சியின் பின்னர் எமது சங்கம் கார்த்திகை மாதம் 2013ம் ஆண்டு நிறுவப்பட்டு மிகவும் வெற்றிகரமாக மூன்று ஆண்டுகளை பூர்த்தி செய்கிறது. நூற்றிற்கும் அதிகமான மாணவர்கள் இணைந்து எமது மண்ணின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்பதனை அறியத்தருகின்றோம்.

வரும் காலங்களில் எமது சங்கம் வலுப்பெற்று கூடுதலான அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளோம்.

எமது இந்த சங்கம் தனியே பிரித்தானியா வாழ் பழைய மாணவர்களை மட்டும் கொண்டிராது ஐரோப்பிய மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களையும் உறுப்பினர்களாக கொண்டுள்ளது. மண்ணின் மீது விருப்பம் கொண்ட எவராக இருந்தாலும் அவர்கள் எம்மூடாக உதவிகளை செய்யமுடியும் என்பதை தெரிவித்துகொள்கிறேன்.

செயலாளர்

**சி.ரட்ணதீபன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய மாணவர் சங்கம் வெற்றி-கரமாக மூன்றாம் ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ளது. இக்குறுகிய காலத்தில் சங்கம் பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னின்று நடாத்தி பழைய மாணவர்களை ஒன்றிணைத்ததுடன் திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுக்க கணிசமான நிதியையும் திரட்டி உள்ளது. இதன் மூலம் எமது பாடசாலையும் மாவட்டத்தில் உள்ள பிற பாடசாலைகளும் பயனடைந்துள்ளன.

இதற்கு உறுதுணையாக இருந்த குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் ஆதரவுதந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள். இப்பொது சேவை மேலும் தொடரவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.



பொருளாளர்

**து.பவனகுமார்**

# வாழ்த்துச் செய்தி

குரைகடல் ஓதும் நித்திலங்கொழிக்கும் கோணமாமலையின் கோணேசநாதர் முன்னிலையிலும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருகிலும் அமையப் பெற்றிருப்பதனால் மாவட்டத்தில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் பல சாதனைகளை செய்து கொண்டிருக்கும் கல்வி நிறுவனமாக தி / இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திகழ்கின்றது. இக்கல்லூரியில் நானும் ஒரு மாணவனாக கல்வி கற்றதனையிட்டு பெருமிதமடைந்து கொள்கின்றேன். எமக்கு இக்கல்லூரி என்ன செய்தது என்று நினைப்பதை விட இக்கல்லூரிக்கு நாம் என்ன செய்தோம் என்று ஒவ்வொரு மாணவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பவள விழாவைக் கடந்து பல சாதனைகளை சாதித்து கல்லூரியின் வெற்றிக்கு பல வழிகளிலும் உறுதுணையாக செயற்பட்டு வருவதுடன் இதன் கிளைகளை இலண்டன், கனடா, பிரான்ஸ் மற்றும் உள்நாட்டில் கொழும்பு என பரப்பிக் கொண்டே செல்கின்றது.

அந்த வகையில் இலண்டன் பழைய மாணவர்சங்கக் கிளை முதற் தடவையாக "சாமகானம்" என்ற நூலை வெளியிடுவதையிட்டு பெருமிதம் அடைவதுடன் உலகெங்கும் புகழ்பரப்ப உள்ளத்தால் வாழ்த்தி வணங்குகிறேன்.

"வாழ்க கல்லூரி வளர்க பழைய மாணவர் சங்கம்"

**திரு.ச.சர்வேஸ்வரன்,** செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
தி / இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T/R.K.M SRI KONESWARA HINDU COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION - UNITED KINGDOM
## COMMITTEE 2015 -2017

**President**
Kumaraguru Muhunthakumar

**Vice President (1)**
Ramanakanthan Sivasubramaniam

**Vice President (2)**
Lingeswaran Sabaratnam

**Secretary**
Siva Ratnatheepan

**Treasurer**
Pavanakumar Thurailingam

**Assistant Secretary**
Yogeswaran Paartheepan

**International Co-ordinator**
Abiram Nahulasalingam

**Assistant Treasurer**
Rajaranjan Pushparagavan

**Co-ordinator**
**Event Committee & Sports Committee**
Rajeevan Thiagalingam

**Co-ordinator**
**Media & Communiction Committee**
Sharvi Thangathurai
Prashanthan Vilvarajah
Paraneetharan Nagalingam
Jathees N B

**Co-ordinator**
**Finance & Fundraising Committee &**
**Membership Committee**
Surendran Rudramoorthy

**Event Committee**
Executive : Gajendarn Rudramoorthy
Prasanjothy Selvajothy
Visakesan Murugaiah

**Finance & Fundraising Committee**
Executive : Julian Immanuel
Keerthisingam Sellathamby
Thurruwazan Thevakadatcham
Sathiyaseelan Selvaratnam

**Sports Committee**
Executive : S.Varathabavan
R.Rajapakeerathan
T.Mohanadas
Rajendran Mahinda
Niroopan Perinpanathan
Jeyaseelan

**Membership Committee**
Executive : Gnanenthiren Gnanasampanthar
Gnanenthiren Gnanasampanthar
Logi Jeyalogithan
Kesawarajah Ananthaprashath
Prapa Subramanium
M.Nanthabalan


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes*

*from*

Access Direct (IFA) Ltd

272 Mitcham Road,
Tooting London SW17 9NT

Tel : 020 8767 4252
Fax : 020 8767 9077
Email : yoga@accessdirectifa.com

Access direct (IFA) Ltd is regulated and authorised by
Financial Conduct Authority

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# AGM Business Solutions

Accountants- Harrow

Tel: 07502316738
info@agmtaxadvisers.co.uk







மலர் ஆசிரியர்கள்

**திரு. யோ. பார்த்திபன்**

**திரு. ரா. புஷ்பராகவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் குறிப்பேடு

**2013 -** சமூக சிந்தனையுடன் பழைய மாணவர்கள் சிலரது அயராத உழைப்பில் எமது அமைப்பு உருவாகின்றது. இதிலிருந்து எமது அமைப்பு தனது பயணத்தை தொடங்குகிறது.

**04/02/2014** - முன்னாள் அதிபர் மதிப்புக்குரிய திரு.சி. தண்டாயுதபாணி அவர்களுக்கு இராப்போசன விருந்து ஒழுங்கு படுத்தப்பட்டது. சில பழைய மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**05/07/2014** - முதலாவது ஒன்றுகூடல் நிகழ்வு **(Trinco Gala Night 2014)** இதில் பெரும்பாலும் திருக்கோணமலை மாவட்டத்தை சேர்ந்த உறவுகள் குடும்பமாக வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**27/07/2015** - எமது முதலாவது விளையாட்டு விழா **(Trinco Sports Day 2014** ) இனிதே நடைபெற்றது. எமது பழைய மாணவர்களது பிள்ளைகள் மிகவும் உற்சாகத்தோடு பங்குபற்றினார்கள்.

**15/11/2014 –** 'திருக்கோணேஸ்வரம்' எனும் புத்தகம் வெளியிடப்பட்டது. அத்துடன் எமது வருடாந்த பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

**28/06/2015 –** இரண்டாவது ஆண்டாக எமது விளையாட்டு விழா இனிதே நடைபெற்றது.

**12/09/2015** - இரண்டாவது ஆண்டாக எமது ஒன்றுகூடல் **(Trinco Gala Night 2015)** சிறப்பாக நடைபெற்றது.

**21/11/2015** - எமது வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

**15/12/2015 -** எமது நிதியுதவியில் பாடசாலையின் இரசாயனவியல் ஆய்வுகூடம் புனரமைப்பு செய்யப்பட்டது.

**25/12/2015 -** எமது நிதியுதவியில் மூதூரில் உள்ள சில பாடசாலைகளுக்கு தளபாடங்கள் சில வழங்கப்பட்டன.

**10/07/2016 -** மூன்றாவது ஆண்டாக எமது விளையாட்டு விழா இனிதே நடைபெற்றது.

**07/09/2016 -** திருக்கோணமலையில் அமைந்துள்ள ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயத்திற்கு நகலி ஒன்று வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "திருக்கோணேஸ்வரம்" புத்தக வெளியீட்டின் போது நடந்த நிகழ்வுகள்...











சிவமயம்.........

கோணமலையான் அருள் பெற்று பிறப்பொன்று கண்டோம் !
பிறந்தங்கு பல முனையில் கல்வி கொண்டோம் !
உயர் கல்விக்காய் இந்துக்கல்லூரி தலை கொண்டோம் !
கல்லூரி தலை கொண்டு மாணவராய் நாமெல்லாம் ஒன்றினைந்தோம் !
ஒன்றினைந்தோம் வீர ராய் சூர ராய் பின் கல்லூரி காளையராய் !
காளையாய் தோழனாய் மலையினிலே வலம் வந்தோம் !
வலை கொண்டோம் பின் கல்லூரி கன்னியரின் கடைக்கண் பார்வையிலே
சிறை கொண்டோம் !
பலர் சிறை கொண்டோம் அங்கு அரசின் வன்முறையால் சினம் கொண்டோம் !
சினம் கொண்டு பிரிந்ததனால் பல பல தேசம் உரிமை கொண்டோம் !
உரிமை கொண்டோம் அங்கு கலை பல தொழில் வளம் கண்டோம் !
வளம் கண்டோம் அங்கு தேசம் பிரிந்ததனால் நண்பர்கள் நாம் துயர் கொண்டோம் !
துயர் துடைக்க இனம் கண்டோம் வட்ஸ்சப்பை நண்பர்கள் நாம் !
பின் நண்பர்கள் நாம் விழா கொண்டோம் லண்டன் ஒன்று கூடல் கண்டு !
ஒன்று கூடல் இனிதே தொடரட்டும் நாடெங்கும் அலை அலையாய் பிரிந்த
மலையரின் சங்கமத்தில் !
மலையினிலே திருமலையினிலே கோணேஸ்சர் மலையினிலே சத்தியம்
இது நட்புக்களின் சங்கமம் , .

**சியாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் அதிபர் சி. தண்டாயுதபாணி அவர்களுடனான இராப்போசன விருந்தின் போது







## பேராயர் நோயல் இமானுவேல் அவர்களை மரியாதையின் நிமித்தம் சந்தித்து அவருக்கு உரிய விருதினை வழங்கி கௌரவித்த வேளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinco Gala Night 2015















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinco Sports Day 2016
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Committee 2013-2015



**ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயத்திற்கு நகலி** (Photo Copy Machine)
**ஒன்று வழங்கப்பட்ட போது**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Committee 2015 -2017


Officers


Sports Committee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Media, Finace and Fundraising Committee 2015 -2017


Membership Committee 2015 -2017


Event Committee 2015 -2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Life Time Members

| | | |
|---|---|---|
| 1 | UK001 | Abiram Nahulasalingam |
| 2 | UK003 | Julian Emmanuel |
| 3 | UK005 | Gajendarn Rudramoorthy |
| 4 | UK006 | Gangatharan Subramaniam |
| 5 | UK007 | Gnanenthiren Gnanasampanthar |
| 6 | UK008 | Gowmaran Murugiah |
| 7 | UK014 | Lingeswaran Sabaratnam |
| 8 | UK015 | Logi Jeyalogithan |
| 9 | UK017 | Kumaraguru Muhunthakumar |
| 10 | UK019 | Yogeswaran Paartheepan |
| 11 | UK021 | Prabaharan Subramanium |
| 12 | UK024 | Rajaranjan Pushparagavan |
| 13 | UK025 | R.Rajapakeerathan |
| 14 | UK027 | Rajeevan Thiagalingam |
| 15 | UK028 | Ramanakanthan Sivasubramaniam |
| 16 | UK033 | Sathiyaseelan Selvaratnam |
| 17 | UK035 | Sharvi Thangathurai |
| 18 | UK038 | Surendran Rudramoorthy |
| 19 | UK039 | Thiruchelvam Rajmohan |
| 20 | UK042 | Siva Ratnatheepan |
| 21 | UK043 | Pavanakumar Thurailingam |
| 22 | UK057 | Kesawarajah Ananthaprashath |
| 23 | UK058 | Prasantha Jothy Selva Jothy |
| 24 | UK061 | Keerthisingam Sellathamby |
| 25 | UK066 | Visakesan Murugaiah |
| 26 | UK071 | Bala Suresan |
| 27 | UK077 | Janarthan Rajathurai |
| 28 | UK078 | Arumugam Athavan |
| 29 | UK079 | S. Rajeswaran |
| 30 | UK083 | T.Mohanathasan |
| 31 | UK084 | S.Varathabavan |
| 32 | UK076 | T. Jathesenaikabahu |
| 33 | UK012 | Koneswaran Navaratnasamy |
| 34 | UK046 | Mahalingam Balaskanthar |
| 35 | UK063 | Thurruwazan Thevakadatcham |
| 36 | UK083 | R.Kugan |
| 37 | UK065 | Prakash Ganeshalingam |
| 38 | UK036 | Siam N Bahu |
| 39 | UK016 | Mayuran Balasubramaniam |
| 40 | UK060 | Dr. Rita Vasanthadevi Pushparajah |
| 41 | UK096 | Satchithanandeswar Yasaskaran |
| 42 | UK085 | Karthikesan Narenthiran |
| 43 | UK086 | Narayanan Carthigeyan |
| 44 | UK087 | Nadarajah Thulaseetharan |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 45 | UK088 | Dr. Namasivayam Sathiyamoorthy |
| 46 | UK089 | Rajanathan Srividi |
| 47 | UK059 | Gowri Kanagasabai |
| 48 | UK072 | Rudra Manoharan |
| 49 | UK090 | Vilvarajah Balaganeshan |
| 50 | UK091 | Balasubramaniam Arunadeva |
| 51 | UK092 | T.Rajkumar |
| 52 | UK037 | Subramaniam Sivashanmuganathan |
| 53 | UK093 | Sabaratnam Nandakumar |
| 54 | UK095 | Shivalingam Gunendran |
| 55 | UK032 | Satchithanantha Kurukkal |
| 56 | UK097 | Rasanayagam |
| 57 | UK098 | Kunchithapatham Radhathakrishnan |
| 58 | UK100 | Ratnasamy Sabesan |
| 59 | UK101 | Victor Ramanan |
| 60 | UK074 | Charles Amarnath |
| 61 | UK102 | K.Pathmanathan |
| 62 | UK103 | Mandeleswaran Thasarathakumar |
| 63 | UK104 | Ratnakumar |
| 64 | UK105 | Jude Sharishnakumar |
| 65 | UK106 | Sivanayagam Uthayavanan |
| 66 | UK107 | Sekaran Subramaniyam |
| 67 | UK108 | Sanjeevan Sathiyapalan |
| 68 | UK109 | R.Vasanthakumar |
| 69 | UK029 | Rameshkumar Rasarathinam |
| 70 | UK110 | Kanagasabapathy Madanadeva |
| 71 | UK111 | Jesudas Anthonypillai |
| 72 | UK112 | B.Sivagnanasegram |
| 73 | UK113 | K.Vijayanathan |
| 74 | UK030 | Saravanabavan Ramachandran |
| 75 | UK114 | S.Srithar |
| 76 | UK044 | Mathiyalakan Mylvaganam |
| 77 | UK045 | Alagiah Nagakanthan |
| 78 | UK070 | Mahadevan Jeyaseelan |
| 79 | UK048 | Thayalaseelan |
| 80 | UK115 | Konamalai Jayadeva |
| 81 | UK116 | S Narendran |
| 82 | UK117 | K Devkumar |
| 83 | UK118 | Nagarasa Suthagaran |
| 84 | UK119 | J Christy William |
| 85 | UK120 | Inpasanthan Kathiravelu |
| 86 | UK052 | Kaileshwaran Kanapathipillai |
| 87 | UK055 | Sivananthan Subramaniyathas |
| 88 | UK121 | Perinpanathan Nirooban |
| 89 | UK051 | Balakrishnan keethanjan |
| 90 | UK073 | Sutharsan Arumugam |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 91 | UK123 | Vijendran |
| 92 | UK047 | Jeyaserlan Balasubramaniam |
| 93 | UK124 | Joseph Vijiyanathan |
| 94 | UK127 | Yoges Pushparajah |
| 95 | UK128 | Thurairajah Kugarooban |
| 96 | UK034 | Shankar Arulananthasivam |

## Annual Members

| | | |
|---|---|---|
| 1 | UK002 | Alagaiah Yogarasa |
| 2 | UK004 | Feroz Khan |
| 3 | UK009 | Jeyapragash Selvarajah |
| 4 | UK010 | Kanagasabai Pratheepan |
| 5 | UK011 | Kandeepan Rasaligham |
| 6 | UK013 | Kugananthan Paramalingham |
| 7 | UK022 | Prashanthan Vilvarajah |
| 8 | UK023 | Prashanthan Vilvarajah (2002) |
| 9 | UK026 | Puvanendran Rajiharan |
| 10 | UK031 | Sasi Shan |
| 11 | UK129 | Gunaratnam Tharmakulasingam |
| 12 | UK037 | Subramaniam Sivashanmuga-nathan |
| 13 | UK040 | Vadivelu Balarajan |
| 14 | UK041 | Vasee Sachchithanantha |
| 15 | UK049 | Prashanthan Kailainathan |
| 16 | UK050 | Sithiravel Vignes |
| 17 | FR001 | Niranjan Rajshanker |
| 18 | UK053 | Kamsan Theva |
| 19 | UK054 | Loganathan Gobinath |
| 20 | UK056 | Raviraj Hariharan |
| 21 | UK062 | M Rajkumar |
| 22 | UK064 | Sivasambu Sundara anantham |
| 23 | UK068 | Thamotharampillai Tharmarajah |
| 24 | UK069 | Kandasamy Vimalendrakumar |
| 25 | UK075 | Jasmin N Bahu |
| 26 | UK080 | Dinesh |
| 27 | UK081 | J Jeyakanth |
| 28 | UK082 | Roch Arulappu Sutharsan |
| 29 | UK084 | M.Nandapalan |
| 30 | UK099 | Navaratnam Veluppillai |
| 31 | UK094 | S.Ganeswaran |
| 32 | UK122 | Dharmendran Muthukumar |
| 33 | UK125 | Paranietharan Nagalingam |
| 34 | UK126 | Ajanthan Rjeswaran |
| 35 | UK130 | B. Rishikesan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாபுரத்து வன்னிபங்கள்

இலங்கை ஐரோப்பியரின் காலணித்துவ ஆட்சியின் கீழ் செல்வதற்கு முன்னர் நாட்டின் வட பகுதியில் முழுமையாக வளர்ச்சியடைந்த யாழ்ப்பாண இராட்சியமும், அடங்காப்பற்று (வன்னி), திருகோணமலைப் பிரதேசம், மட்டக்களப்பு தேசம், புத்தளம், சிலாபம் ஆகிய பிரதேசங்களில் சுயாட்சி அதிகாரம் கொண்ட தமிழ் வன்னிபங்களால் ஆளப்பட்ட சிற்றரசுகளும் காணப்பட்டன. இதில் யாழ்ப்பாண இராட்சியம் தவிர்ந்த அனைத்தும் வன்னி அரசுகள் என அழைக்கப்பட்டன.

திருகோணமலைப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை அது நான்கு வன்னிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. திருகோணமலை (நகரப்பகுதி), கட்டுக்குளப் பற்று, கொட்டியாபுரப் பற்று (மூதூர், வெருகல், சேருவில), தம்பலகாமப் பற்று என்பன அவையாகும். பயிர்ச்செய்கை விருத்தியால் தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த திருகோணமலையின் நான்கு வன்னிப் பற்றுக்களும் குளக்கோட்டு மன்னன் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததோடு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட வரையறைகளையும் கொண்டிருந்தது.

வன்னிப்பற்றுக்கள் என்றழைக்கப்பட்ட இப்பிரதேசத்தினை ஆட்சி செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர் 'வன்னிபம்' என்பதாகும். இது வன்னியனார், வன்னிராசர் போன்ற சொற்களுக்கு இணையானது. வன்னிபங்கள் தமது ஆட்சிப்புலத்தில் சுயாட்சி அதிகாரம் கொண்டிருந்தனர். பெரும்பாலான ஒல்லாந்து ஆவணங்கள் வன்னிபங்களை அரசன் என்றும், அவர்களது ஆட்சிப்புலத்தினை 'இராட்சியம்' என்றும் குறிப்பிடுகிறது. சுயாட்சி அலகுகளான இவ்வன்னிப்பற்றுக்களில் சில வெவ்வேறு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண, கண்டி இராட்சியங்களின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன.

திருகோணமலையில் இருந்த நான்கு வன்னிப் பிரிவுகளிலும் இடப் பரப்பிலும், இயற்கை வளத்திலும், படைப்பலத்திலும், துறைமுக நகராகவும் முக்கியத்துவம் பெற்று விளங்கிய பிரதேசம் கொட்டியாபுரப் பற்றாகும். இத்தகைய சிறப்புப்பெற்றிருந்த கொட்டியாபுரப் பற்றினை ஆட்சி செய்த வன்னிபங்கள் பற்றிய தகவல்கள் கல்வெட்டுக்கள், பண்டைய நூல்கள், உறுதிகள், ஐரோப்பியரின் ஆவணங்கள் என்பனவற்றில் இருந்து எமக்கு கிடைக்கின்றது. இலங்கையில் காலணித்துவ ஆட்சி ஏற்பட்ட பின்னரும் வன்னிபங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் பிரதேச நிர்வாகிகளாகச் செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் கொட்டியப்புரப் பற்றின் வன்னிபங்களாகச் செயற்பட்ட சிலரின் பெயரினை பிரித்தானிய ஆவணங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. 1939 ஆம் ஆண்டில் திரு. T.சங்கரப்பிள்ளை அவர்களும், 1924 ஆம் ஆண்டில் திரு. சின்னப்பு நவசிவாயம் அவர்களும் கொட்டியாபுரப் பற்று வன்னிபங்களாகக் கடமையாற்றினர். 1912 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15,16 திகதிகளில் மட்டக் களப்பில் இடம்பெற்ற மாகாநாடு ஒன்றில் கொட்டியாபுரப் பற்று வன்னிபம் திரு. D. துரையப்பா கலந்து கொண்டிருந்தார். மேலே குறிப்பிடப் பட்டவர்களில் வன்னிபம் திரு. சின்னப்பு நவசிவாயம் அவர்களின் பாட்டனார் (கதிரவேலு வன்னிபம்), மாமனார் (கந்தப்பர் வேலுப்பிள்ளை வன்னிபம்) இருவரும் கொட்டியாபுரப் பற்று வன்னிபங்களாக கடமை யாற்றியவர்கள். எனினும் அவர்களது பதவிக்காலம் பற்றிய விடையங்கள் உறுதியாகத் தெரியவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கொட்டியாபுரத்து வன்னிபம் தொடர்பாக இரண்டு குறிப்புக்கள் கிடைக்கின்றன. 1893.06.14 இல் கொட்டியாபுரப் பற்று மேன்காமத்தில் வசித்த இருமரபுந் துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபம் பற்றி அவரது தம்பலகாமம் கோணைநாயகர் கோவில் பாராபரிப்புத் தொடர்பான நியமன உயில் மூலமாக அறியக்கிடைக்கிறது. அவ்வுறுதியில் சாட்சியங்களாக கையொப்பமிட்டு இருப்பவர்களுள் மூதூர் தம்பையா முத்துக்குமாரு வன்னிபமும் ஒருவர் என்பது சிறப்பம்சமாகும்.

10.04.1815 ஆம் ஆண்டில் திருகோணமலைப் பிரதேசத்தினைச் சேர்ந்த நான்கு வன்னிப் பிரிவுகளினதும் தேசவழமைகள் குறித்த அறிக்கையினை பிரதம நீதியரசரான அலெக்'ாந்தர் ஜோன்ஸ்ரன் அவர்களுக்கு வன்னி-பங்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். அவ்வறிக்கையில் கொட்டியாபுரப் பற்றிலுள்ள வழமைகள் தொடர்பில் கொட்டியாபுரப் பற்று வன்னிபத்தால் அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில் திருமணம் தொடர்பான நடைமுறைகள், சட்டங்கள், சீதனம், சொத்துரிமை, நன்கொடைகள், சொத்து விற்பனை தொடர்பான விடையங்கள், வளர்ப்புப் பிள்ளை (மஞ்சள் நீர்ப்பிள்ளை) தொடர்பான கடமைகள் போன்ற விடயங்கள் விபரிக்கப்பட்டிருந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டில் திருகோணமலை மாவட்ட ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்கள; 15.05.1786 அன்று கொட்டியாபுரப் பற்றிற்கு விஜயம் செய்திருந்தார். அவரை கொட்டியாபுரப் பற்று வன்னிபம் இருமரபுந் துய்ய எதிர்வீரசிங்க நல்ல மாப்பாண வன்னியனார் மூதூரின் இறங்குதுறையில் வைத்து வரவேற்றார். ஆளுநர் தனது விஜயத்தின் போது ஊர் மக்களதும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத் தலைவர்களினதும் கூட்டத்தில் (02.06.1786) ஆளுநர் இல்லாத போது வன்னியனார்தான் உங்களது தலைமை அதிகாரி' என்று கூறியதை தனது அறிக்கையில் பதிவு செய்திருக்கிறார். சுற்றுப்பயணத்தின்போது 25.05.1786 இல் மேன்காமத்தில் ஒரு வன்னியனாரின் வீட்டில் தங்கியிருந்த அவர் அவ்வன்னியனார் சிறிதுகாலத்துக்கு முன்னர் காலமானதைப் பதிவு செய்கிறார். எனினும் அவ்வன்னியனாரின் பெயர் அறிக்கையில் குறிப் பிடப்படவில்லை.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கி.பி.1611 இல் கண்டியரசன் போர்த்துக்கேயருக்கு எதிரான போராயத்தங்களை மேற்கொண்ட பொழுது அதற்காகக் கூட்டப்பட்ட இராசதானி பிரதானிகள் சபையில் கொட்டியாபுரப பற்று வன்னிபம் இடலி கலந்துகொண்டிருந்தான். எனினும் 1612 ஆம் ஆண்டில் கொட்டியாபுர வன்னிபம் கண்டியரசனுக்கு எதிரான கிளர்ச்சி யொன்றை ஏற்படுத்தும் சூழ்ச்சித் திட்டத்தினில் பங்குகொண்டானென குற்றம் சுமத்தப்பட்டது. அதன் காரணமாக கண்டி அரச சபையிலே பிரசன்ன மாகுமாறு வன்னிபத்திற்கு அரசன் கட்டளையிட்டான். வன்னிபமான இடலி நோய்வாய்ப்பட்டு இருந்த காரணத்தால் தன்னை அழைத்தமைக்கான காரணங்களை அறிவதற்கு தனது மருமகனை இராசதானிக்கு அனுப்பி வைத்தான். இதன் பிரதிபலனாக கொட்டியாபுரத்து வன்னிபம் கண்டி அரசனுடைய விசுவாசத்தினை மீண்டும் பெற்றுக் கொண்டான். அதனை அதற்கு அடுத்த ஆண்டு இடம்பெற்ற நிகழ்வுகள் உணர்த்துவதாக இருந்தது.

1613 ஆம் ஆண்டில் கண்டி அரசன் நோயுற்று இருந்தான். அவன் தான் இறக்க நேரிடும் என்ற எண்ணம் ஏற்பட்டதனால் தனது வாரிசாக இளவரசனை நியமிப்பதற்கும், அரச பரிபாலனத்தை கொண்டு நடாத்து வதற்கும் ஒரு குழுவினை நியமிப்பதற்கு இராசதானிகள் சபையினைக் கூட்டினான். அச்சபையின் முடிவுகளை தெரிவிப்பதற்கென இளவரசனை அழைத்துவரும் பொறுப்பினை கொட்டியாபுரப் பற்று வன்னிபத்திடம் கண்டி அரசன் ஒப்படைத்தான்.

கி.பி. 1639 ஆம் ஆண்டில் திருகோணமலையில் உள்ள போர்த்துக்கேயரின் கோட்டையை ஒல்லாந்தரின் கடற்படைத் தலைவன் 12 கப்பல்கள் அடங்கிய படையுடன் முற்றுகையிட்டான். அவனுக்கு உதவியாக கொட்டியாபுரப் பற்றில் இருந்து 500 படைவீரர்களும், தொழிலாளர்களும் சென்றிருந்தனர். கொட்டியாபுரத்து வன்னிபம் கண்ணில் ஊனமுற்று ஐந்து வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தபடியால் அவ்வன்னிபம் போரில் பங்குகொள்ளவில்லை எனச் சொல்லப்படுகிறது. எனினும் கொட்டியாபுர வன்னிபம் மூலமாக கோட்டைக்குப் போகும் இரகசியப் பாதையை ஒல்லாந்தர் அறிந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடம் இருந்து திருகோணமலையைக் கைப பற்றிக் கொண்டதன் பின்னால் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் பரவலாக உருவாகின. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி கொட்டியாரத்தின் பின்னனி நிலங்களை கைப்பற்றுவதன் மூலம் வரிகளையும், வருமானங்களையும் அதிகமாகப் பெறலாம் எனத் திட்டமிட்டார்கள். இதன் முதல் நடவடிக்கையாக கொட்டியாபுர வன்னியனாரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலப்பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக 22 ஒல்லாந்துப் படை வீரர்களும் 24 லஸ்கரின்ஸ் படைகளும் அனுப்பப்பட்டார்கள். ஒல்லாந்தரின படைகள் கிராமங்களுக்குள் சென்றதும் கொட்டியாபுரப் பற்று வன்னிபமாக இருந்த இருமரபுந் துய்ய இளஞ்சிங்க வன்னிபத்தின் கொட்டியாபுரப் படையும் கிராம மக்களும் ஒல்லாந்தரின் படைகளைச் சுற்றிவளைத்துத் தாக்கத் தொடங்கினார்கள். இந்தத் தாக்குதலில் ஒல்லாந்தர் தரப்பில் 45 படைவீரர்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு ஒல்லாந்துச் சிப்பாய் மாத்திரம் உயிருடன் திரும்ப முடிந்தது. இதனால் கொட்டியாபுரத்தில் இருந்த ஒல்லாந்து ப்படை திருகோணமலைக் கோட்டைக்குள் முடங்கியது. இந்நிகழ்வுகள் கி.பி. 1670 ஆம் ஆண்டளவில் நடந்து முடிந்ததாக கருதப்படுகிறது.

கொட்டியாபுரப் பற்று வன்னிபம் இருமரபுந் துய்ய இளஞ்சிங்க வன்னியனார் வீரமும், தமிழ்ப்பற்றும் ஒருங்கே கைவரப்பெற்றவராக விளங்கினார். 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்டி மன்னன் இரண்டாம் இராஜ சிங்கனின் (கி.பி 1635 - 1687) ஆட்சிக்காலத்தில் இளஞ்சிங்க வன்னிபத்தின் முன்னிலையில் நூல் அரங்கேற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது. தம்பல காமத்தைச் சேர்ந்த வீரக்கோன் முதலியார் பாடிய ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் எனும் நூல் அரங்கேற்றம் வெருகல் சித்திர வேலாயுதர் கோயில் மண்டபத்தில் நிறைவேறியது. அங்கு கூடியிருந்த தேசத்தவர் மாகாநாட்டில் கொட்டியாபுர வன்னிபம் இருமரபுந் துய்ய இளஞ்சிங்க வன்னிபம் தலைமை தாங்கி சிறப்பிக்க நூல் அரங்கேறியிருக்கிறது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நூல் அரங்கேற்றம் பற்றிய தகவல்களை சிறப்பாகக் கொண்டிருக்கும் இந்நூல் இளஞ்சிங்க வன்னிபம் தொடர்பான குறிப்புகளை ஆதாரப்படுத்துவதாக இருக்கிறது.

இதற்கடுத்ததாக வரலாற்று முக்கியத்துவம் வாயந்த சாசனம் ஒன்று வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் இருக்கிறது. ஸ்ரீ சுப்ரமண்ய நம தெற்கு மதில் கயில வன்னியனார் உபயம் எனக் குறிப்பிடும் அச் சாசனத்தின் வரிவிடங்கள் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுக்குரியவை. அக்காலத்தில் கொட்டியாரப்பற்றில் அரசு புரிந்த கயில வன்னிபத்தால் தேசத்துக் கோயிலான வெருகல் சித்திர வேலாயுதர் கோயிலின் தெற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிற்சுவர் கட்டிக்கொடுக்கப்பட்டதை அது ஆதாரப்படுத்துகிறது.

பதினாறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கை ஒன்றினைப் ஒல்லாந்துப் பாதிரியார் Philipus Baldaeus அவர்கள் பதிவு செய்திருக்கிறார். கண்டி அரசனான முதலாம் விமலதர்மசூரியன் (கி. பி 1590 -1604) ஜெயவீர பண்டாரனுக்கு எதிராக போர்புரிந்த காலத்தில் கண்டி அரசனுக்கு ஆதாரவாக கொட்டியாபுரப் பற்று வன்னிபம் 7,980 போர் வீரர்களையும், 600 கூலியாட்களையும், 1000 பொதிமாடுகளையும், 30 போர் யானைகளையும், 25 அலியன் யானைகளையும் அனுப்பியிருந்தான் எனக் குறிப்பிடுகிறார் அவர். இவ்வாவணப்படுத்தல் மூலம் கொட்டியாபுரப் பற்று வன்னிபத்திடம் அக்காலத்தில் கணிசமான படைப்பலம் இருந்திருக்குமென ஊகிக்க முடிகிறது. அத்துடன் கொட்டியாபுரப் பற்று வன்னிபம் கண்டி அரசின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்ததையும் இச்சம்பவம் உறுதிப் படுத்துகிறது.

கொட்டியாபுரப் பற்று சுதந்திரச் சிற்றரசாக இருந்த காலப்பகுதி தொடர்பான தகவல் பதின்நான்காம் நூற்றாண்டில் கிடைக்கிறது. கங்குவேலிச் சிவன் கோவில் கல்வெட்டு அதற்கான ஆதாரமாக அமைகிறது. இது ஒரு பூமிதானம் தொடர்பான கல்வெட்டு. இதனைப் பொறித்த வன்னிபத்தை திருகோணமலை வன்னியனார் என இனங்காணும் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் அவ்வன்னிபம் சாசனம் எழுதப்பட்ட காலத்தில் கொட்டியாபுரப் பற்றில் அதிகாரம் பெற்றவராக இருந்தார் என்கிறார். அத்துடன் அவ்வன்னிபம் மேலாதிக்கம் செலுத்தும் அதியரசன் எவருமில்லாமல் சுதந்திரமாக ஆட்சிபுரிந்தவன் எனபதையும் அவர் பதிவுசெய்கிறார்.

இதுவரை நாம் பார்த்துவந்த ஆதாரங்களுக்களுக்கு மேலதிகமாக கொட்டியாபுர வன்னிபங்கள் தொடர்பான தகவல்களைத் தரும் இலக்கிய ஆதாரங்கள் இரண்டு நம்மிடம் இருக்கின்றன. முதலாவது கோணேசர் கல்வெட்டு என்கின்ற நூல். கவிராஜவரோதயன் அவர்களால் 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இந்நூல் சாசன ஆதாரங்களைக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கிய நூலாகக் கருதப் படுகிறது.

குளக்கோட்டு மன்னனால் ஒழுங்கமைக்கப்பட்ட வன்னிபங்களின் பெயர் விபரங்கள் இதில் இடம்பெற்றுள்ளது. திருகேகாணமலைப் பற்றிலிலுள்ள பூபாலகட்டு எனும் இடத்திலுள்ள மாளிகைகளில் வாழ்ந்த 'தனியுண்ணாப் பூபாலன்' எனும் சிறப்புப் பட்டம் தாங்கிய 32 வன்னிபங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக மருங்கூர் வன்னிபம் 37 பேரும், சோழநாட்டு வன்னிபம் 31 பேரும், காரை நகர் வன்னிபம் 42 பேரும் இந்நூலில் அடங்கியிருக் கிறது. தம்பலகாமப் பற்று, கொட்டியாபுரப் பற்று, கட்டுக்குளப் பற்று என்ற மூன்று வன்னிபப் பிரிவுகளையும் ஆட்சி செய்த வன்னிபங்களாக காரைநகர், மருங்கூர், சோழநாட்டுக் குலங்களில் வந்த வன்னியங்கள் கருதப்படுகின்ற போதும் தனித்தனியாக அவர்களை இனங்காண்பது கடினமானதாக இருக்கிறது. மேலும் பல ஆய்வுகள் செய்தால் கொட்டியாபுரப் பற்றினை ஆண்ட வன்னிபக் குலம் எதுவென அடையாளம் காணலாம். இரண்டாவது இலக்கிய ஆதாரமான வையாபாடல் 16 ஆம் நூற்றாண்டளவில் வித்துவான் வையாபுரி ஐயர் அவர்களால் இயற்றப் பட்டது. இதில் மாமுகன் எனும் வன்னியன் வெருகல், தம்பலகாமம் எனும் பிரதேசங்களை ஆண்டதாகச் சொல்கிறது.

இதுவரை நாம் பார்த்துவந்த கொட்டியாபுரத்து வன்னிபங்கள் தொடர்பான ஆதாரங்கள் ஒரு முழுமையடையாத தொகுப்பாக இருப்பதை உணர்வீர்கள். காலவரையறைப்படி ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவில் கொட்டியாபுரப் பற்று வன்னிபங்கள் தொடர்பான தகவல்களைப் பதிவு செய்ய இன்னும் பல முதல்நிலைத் தரவுகள் தேவைப்படுவதாக இருக்கிறது. அவை இன்னும் வெளிப்படுத்தப்படாத கல்வெட்டுகளாக, ஓலைச் சுவடிகளாக, காணி உறுதிகளாக, தொல்பொருட் சின்னங்களாக, ஐரோப்பியர் ஆவணங்களாக, வாய்மொழி வழங்காறுகளாக நம்மைச் சுற்றி இருக்கக்கூடும். அவற்றைத் தேடி முறையாக வெளிப்படுத்துவதன் மூலமே நாம் அந்த இலக்கினை அடையமுடியும்.

Dr.j. ஜீவராஜ்

www.geevanathy.com

ஊசாத்துணை


வன்னியர் - பேராசிரியர் சி. பத்மநாதன் 1970

இலங்கைத் தமிழர் தேச வழமைகளும், சமூக வழமைகளும் - பேராசிரியர். சி. பத்மநாதன்

காலனித்துவ திருகோணமலை - கனகசாபாபதி சரவணபவன் – 2010

'கோணேசர் கல்வெட்டு' - பதிப்பாசிரியர் பண்டிதர் இ. வடிவேல்

வெருகல் சிந்திரவேலாயுதர் காதல் - உரையாசிரியர் - பண்டிதர் இ. வடிவேல் 1906

இலங்கைத் தமிழ் சாசனங்கள் 2 – பேராசிரியர் சி. பத்மநாதன் – 2013

A True and Exact Description of the great Island of Ceylon by– Philipus Baldaeus




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ்

அமுதமொழியெனும் எங்கள் தமிழ் - அது
அழகுச்சுடர் விட்டெரியம் தமிழ்
அன்று அவனியில் எங்கள் தரையினில்
ஆதியல் உதித்தது எமது நற்தமிழ்
பாரெங்கும் பரவிடும் தெள்ளு தமிழ்.

கனிமொழியாகிய எங்கள் தமிழ் - அது
அறுசுவைக் கனிகளின் சாறுடனே - பசும்
பால்தனைப் பாகினைச் சேர்த்து நன்றறே - நாம்
அருந்திச் சுவைத்திடும் இனிய தேன் தமிழ்.
தின்னத் தின்னத் தித்திக்கும் தீந்தமிழ்.

வளர்மொழியாகிய எங்கள் தமிழ் - அது
முனிவர்குலத் தவ வேந்தர்களும், - பின்
புலவர் தகு பா வேந்தர்களும்
பண்ணுடன் பண்புடன் பாடும் பழந்தமிழ்
மூநாட்டு வேந்தரும் போற்றும் பைந்தமிழ்

வண்மொழியாகிய எங்கள் தமிழ் -அது
வெண்மதி ஒளியினைத் தன்னுள்ளே
பருகிய பாங்கினை உலகுணர்த்தி
பகலவன் வாழ்த்திய தூயசெந்தமிழ்
தண்ணொளி உடுக்களும் கொஞ்சுமெழில் தமிழ்.

சிந்துமொழியெனும் எங்கள் தமிழ் - அது
இந்திய தேசத்தின் தே மதுரத்தமிழ் - எம்
ஈழத்தில் நாட்டிய வீரத்தமிழ் - எம்
செல்வமாய்ச் செழித்திடும் தங்கத்தமிழ் - கவி
பாரதி பாடிய வேங்கைத்தமிழ்

தாய் மொழியாகிய எங்கள் தமிழ் - அது
தாயக மண்கொண்ட தாகம் தனையும் - தன்
மானத்தமிழனின் பசியும், பிணியும்
போக்கிட முழங்கிடும் பொங்குதமிழ் - எம்
தாய்மையை ஊட்டிடும் சங்கத்தமிழ்.
எங்கள் தமிழ் - அது எங்கள் தமிழ்
நாங்கள் தமிழ் - நம் நாடும் தமிழ்
மொழியும் தமிழ் - எம் வழியும் தமிழ்
பேச்சு தமிழ் - எம் மூச்சும் தமிழ்
உயிரும் தமிழ் - ஊன், உடலும் தமிழ்
உணர்வும் தமிழ் - இவ் உலகும் தமிழ்.
எங்கும் தமிழ் - அது எங்கள் தமிழ்.

**– பூ. பிரதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# TRINCOMALEE CAKE DELIVERY



திருமலை பட்டணத்திலும் அதன் அருகாமையிலுள்ள பிரதேசங்களுக்கும் குறிப்பிட்ட வடிவத்தில் குறித்த இடத்தில், திகதியில், நேரத்தில் **B'day, Wedding day, Mother's day, Father's day, Valentine's day and Anniversary CAKES DELIVERY** செய்யப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கங்களிற்கு தொடர்பு கொள்ளவும்.




**Mayoo** - 0094755677403
- 0094262223036

**UK** - 00447404642346
- 00447886510242

**ADDRESS** : NO. 108, LOWER ROAD
ORR'S HILL
TRINCOMALEE
SRILANKA







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMING SOON

Ilakiya
இலக்கியா

*Sri Lankan and South Indian Restaurant*

489 LONDON ROAD
CHEAM. SUTTON
SM3 8JW



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வளமுடன்

நீங்கள் வியக்கும் வண்ணம் அச்சுப்பதிப்பு செய்திட

உங்கள் எண்ணம்போல் வரைகலை செய்திட

# ஆர். எஸ். பிரிண்டர்ஸ்

**விரைவான சேவை - தரமான அச்சுப்பதிப்பு - குறைந்த விலை**




Graphic Design - Printing - Brochures - Wedding Cards - Invitation Cards
Letterheads - Business Cards - Invoices - Foil Printing - Cake Boxes
Plastic Bags, Plastic Cards, Rubber Stamp

வரைகலை, அச்சுப்பதிப்பு, கண்கவரும் வண்ணங்களில் விதவிதமான அழைப்பிதழ்கள், பலகாரப் பெட்டிகள், அரங்கேற்ற மலர்கள், நினைவு மலர்கள், அலுவலகத்திற்குரிய அச்சுப்பதிவேடுகள் மற்றும் உங்கள் தேவைக்கான அனைத்து அச்சுப்பதிப்புக்களுக்கும் அணுகவும்.

தரமான அச்சுப்பதிப்பு 20 வருட அனுபவம்

PRINTERS

**RS Printers Ltd**, 88 Horsenden Lane North, Greenford, Middlesex UB6 7QH
T: **020 8782 3844**, M: **077 6522 4337**, Fax: 020 8903 6038
Email: **rsprintersltd@gmail.com, rsprintersltd@aol.com, www.rsprinters.com**

**உடன் தொடர்புக்கு: றமணன் - 077 6522 4337**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# EAZY
**Accident Claims Ltd**

## WE DEAL WITH



EMPLOYEE DISPUTES



UNFAIR DISMISSAL



FLIGHT DELAYS

**M: 07800 517 629**
**P: 020 8715 5491**
**E: eazyclaimz@gmail.com**
**W: www.eazyaccidentclaims.com**

**4 Laings Corner**
**Locks Lane**
**Mitcham**
**CR4 2JA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Printed by: RS Printers Ltd 07765 224 337 / 020 8782 3844